JEI BEARINGS®
An ISO 9001:2008 Company
REDEFINING REVOLUTIONS

ISSN-0027-1713 NOVEMBER 2013 மலர் 55 | இதழ் 8 | விஜய | கார்த்திகை Rs.30/-

# மோட்டார்

பார்க்க பக்கம் எண் : 43. போட்டியில் கலந்து கொண்டு பரிசை வெல்லுங்கள்

## Rane பெருமைக்குரிய பரிசு









2013

**RBL Wins Deming Grand Prize**






# 2013-ம் வருடத்திற்கான டெமிங் கிரான்ட் விருது ரானே பிரேக் லைனிங் பெற்றது

மிகப் பிரபலமான டெமிங் கிரான்ட் பிரைஸ் 2013–க்கான சிறப்பு விருது ரானே பிரேக் லைனிங் நிறுவனத்திற்கு ஜப்பானில் டோக்கியோ நகரத்தில் நடைபெற்ற வண்ணமிகு நிகழ்ச்சியில் அளிக்கப்பட்டது. டெமிங் பிரைஸ் கமிட்டியின் உப–சேர்மனான திரு.மஸாஹிகோ ஸகானே அவர்களிடமிருந்து ரானே பிரேக் லைனிங் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் திரு.பி.எஸ்.ராவ் அவர்கள் விருதினைப் பெற்றுக்கொண்டார். ரானே குழுமத்தின் சேர்மன் திரு.எல்.கணேஷ் அவர்களின் சார்பாக மேற்படி விருதினை திரு.பி.எஸ்.ராவ் அவர்கள் பெற்றுக் கொண்டார். பிரிக்ஷன் மெடிரியல்கள் உலகளவில் சப்ளை செய்வதற்காக, சாதனையை நோக்கி வீர நடையில் பயணித்து புதிய சகாப்தத்தை ரானே பிரேக் லைனிங் அடைகிறது. இவ்வாறு புகழ்மிக்க டெமிங் கிராண்ட் பிரைஸ் கிடைப்பதினால் உலகளவில் புகழ்மிக்க புதிய சகாப்தத்தை இவர்கள் பெறுகிறார்கள்.

உலகளவில் 26 புகழ்மிக்க வெற்றி நிறுவனங்களுடன் ரானே பிரேக் லைனிங்சும் ஓர் அங்கத்தினராக இணைகின்றனர். இந்தியாவிலிருந்து இதற்குமுன்பாக ஏழு மற்றய கம்பெனியினர் இந்த மதிப்புமிக்க உயர்ந்த விருதினை டோடல் குவாலிடி மேனேஜ்மென்ட்டிற்காக பெற்றுள்ளனர். உலகளவில் முதல் முறையாக பிரிக்ஷன் மெடிரியல் தயாரிக்கும் கம்பெனிக்காக ரானே பிரேக் லைனிங் நிறுவனம் இந்த சிறப்பு மிக்க விருதினைப் பெற்றுள்ளனர்.

ரானே குழுமத்தில் டெமிங் கிரான்ட் பிரைஸ் விருதுகள் கிடைத்த மூன்றாவது நிறுவனம் ரானே பிரேக் லிமிடெட் நிறுவனமாகும். உலகளவில் ஜப்பான் நீங்காலான நாடுகளில் இந்தியாவில் உள்ள ரானே குழுமத்திற்கு தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக இந்த சிறப்புமிக்க டெமிங் கிரான்ட் பிரைஸ் பெற்றுள்ளது என்பது மகிழ்ச்சியான செய்தியாகும். மேலும் இது உலகளவில் இரண்டுக்கும் மேற்பட்ட டெமிங் கிரான்ட் பிரைஸ் பெறும் இரண்டாவது குழுமமாகும்.

ரானே பிரேக் லைனிங் இவ்வாறு டெமிங்கிரான்ட் பிரைஸ் பெறுவது பற்றி, ரானே குழுமத்தின் சேர்மன் திரு.எல்.கணேஷ் அவர்கள் கூறுவதாவது, ஜப்பானுக்கு வெளியே இருக்கும் நாட்டில் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து இந்த சிறப்புமிக்க பரிசினை நாங்கள் பெறுவதில் எனக்கும் எங்கள் குழுமத்தில் உள்ள அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

இவ்விருதினால் எங்கள்மேல் கொண்டுள்ள நல்லெண்ணத்தினாலும் டோடல் குவாலிடி மேனேஜ்மென்ட்டிற்காக நாங்கள் மேற்கொள்ளும் பெரும் முயற்சிக்காகவும், வரும் காலத்தில் சீரான பணியாற்றிடவும் எங்களிடம் எதிர்பார்க்கிறார்கள். அந்த எதிர்பார்ப்பை நாங்கள் பூர்த்தி செய்வோம் என்றார். விருதினைப் பெற்றுக் கொண்ட திரு.பி.எஸ்.ராவ் அவர்கள்





தெரிவிப்பதாவது, டோடல் குவாலிடி மானேஜ்மென்ட் அடைவதற்காக ரானே பிரேக் லைனிங்கின் உள்ள ஒவ்வொரு தொழிலாளரும் மிகவும் ஈடுபட்டுடன் தங்கள் பணிகளைச் செய்து இந்த பரிசினைப் பெறுவதற்கு மிகவும் ஒத்துழைத்துள்ளனர். இதனால் உற்சாகம் பெற்று ஒட்டுமொத்தமாக தரம் உயர்வடைவதுடன் சிறப்பாக பணிகள் செய்திட ஆர்வம் கிடைத்திடும் என்றார். டோக்கியோ நகரத்தில் 1969-ல் இந்த விருது அளிப்பது அமைக்கப்பட்டது. அப்போது நடைபெற்ற முதலாவது இன்டர்நேஷனல் கான்பரன்ஸ் ஆப் குவாலிடி கன்டிரோல் (ICQC) லின் ஞாபகார்த்தமாக துவக்கப்பட்டது. இந்நாள் வரை உலகளவில் 26 கம்பெனியினர் இந்த மதிப்பு மிக்க பரிசினைப் பெற்றுள்ளனர்.

ரானே பிரேக் லைனிங் லிமிடெட் : ரானே பிரேக் லைனிங் ரூ.380 (நிதியாண்டு 2012-13) கோடிகள் விற்பனையாயுற்றியுள்ளன. உலகளவில் உள்ள ஆட்டோமொபைல் இண்டஸ்டிரியில் ஒவ்வொரு துறைக்கும் பிரிக்ஷன் மெடீரியல் சப்ளை செய்து வருகின்றனர். அஸ்பெஸ்டால் இல்லாத பிரேக்லைனிங்ஸ், டிஸ்க் பேட்ஸ் மற்றும் கிளட்ச் பேசிங் ஆகியவை தயாரிப்பதற்கான தொழில்நுட்ப அறிவை பெறுவதற்காக, ஜப்பானில் உள்ள நிஸ்ஷின்போ பிரேக்ஸ் இன்கார்பரேடட்டுடன் கூட்டுத்தயாரிப்பு கொண்டுள்ளனர்.

ரானே குழுமம் : 1929-ம் வருடத்தில் நிறுவப்பட்டது. குழுமத்தில் உள்ள ஏழு கம்பெனியினர், பாதுகாப்பு மற்றும் மிக அத்யாவசியமான காம்பொனன்ட்டுகளை ஆட்டோமோடிவ் இன்டஸ்டிரிக்காக தயாரித்துவருகின்றனர். 2012-13-ம் வருட நிதியாண்டில் இந்த குழுமத்தின் வருவாய் ரூ.2990 கோடிகளாகும். டோடல் குவாலிடி மேனேஜ்மென்டை இக்குழுமக் கம்பெனியினர் கடுமையாக கடைபிடிக்கின்றனர். இக்குழுமத்தில் உள்ள நான்கு கம்பெனியினர் இந்த உலகப்புகழ்மிக்க டெமிங் கிராண்ட் பிரைஸினைப் பெற்றுள்ளனர்.

ரானே பிரேக் லைனிங் நிறுவனம் இத்தகைய உலகப்பிரசித்தி பெற்ற டெமிங் கிரான்ட் விருதுகள் பெற்றமைக்கு மோட்டார் பத்திரிக்கை தன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.